## மே – 09 – வியாழன்

### “வாழ்வுதரும் உணவு நானே”. யோவா 6:48

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 8 : 26 – 40

அந்நாட்களில் ஆண்டவரின் தூதர் பிலிப்பிடம், ”நீ எழுந்து எருசலேமிலிருந்து காசாவுக்குச் செல்லும் வழியாகத் தெற்கு நோக்கிப் போ” என்றார். அது ஒரு பாலைநிலப் பாதை.பிலிப்பு அவ்வாறே புறப்பட்டுப்போனார். அப்போது எத்தியோப்பிய அரச அலுவலர் ஒருவர் எருசலேம் சென்று, கடவுளை வணங்கி விட்டுத் திரும்பிச் சென்று கொண்டிருந்தார். அவர் ஓர் அலி எத்தியோப்பிய அரசியான கந்தகியின் நிதியமைச்சர்.அவர் தமது தேரில் அமர்ந்து எசாயாவின் இறைவாக்கு நூலைப் படித்துக் கொண்டிருந்தார்.தூய ஆவியார் பிலிப்பிடம், ”நீ அந்தத்தேரை நெருங்கிச்சென்று அதனோடு கூடவே போ” என்றார்.பிலிப்பு ஓடிச்சென்று, அவர் எசாயாவின் இறைவாக்கு நூலை வாசிப்பதைக் கேட்டு, ”நீர் வாசிப்பதின் பொருள் உமக்குத் தெரிகின்றதா?” என்று கேட்டார்.அதற்கு அவர், ”யாராவது விளக்கிக்காட்டாவிட்டால் எவ்வாறு என்னால் தெரிந்துகொள்ள முடியும்?” என்று கூறித்தேரில் ஏறித் தன்னோடு அமருமாறு பிலிப்பை அழைத்தார்.அவர் வாசித்துக்கொண்டிருந்த மறைநூல் பகுதி பின்வருமாறு. ”அடிப்பதற்கு இழுத்துச்செல்லப்பட்ட ஆட்டுக்குட்டிபோலும், உரோமம் கத்தரிப்போன் முன்னிலையில் கத்தாத செம்மறி போலும் அவர்தம் வாயைத் திறவாதிருந்தார்.தாழ்வுற்ற நிலையில் அவருக்கு நீதி வழங்கப்படவில்லை. அவருடைய தலைமுறையைப் பற்றி எடுத்துரைப்பவன் யார்? ஏனெனில் அவருடைய உயிர்தான் எடுக்கப்பட்டுவிட்டதே!”அவர் பிலிப்பிடம், ”இறைவாக்கினர் யாரைக்குறித்து இதைக் கூறுகிறார்?தம்மைக் குறித்தா, அல்லது மற்றொருவரைக் குறித்தா? தயவுசெய்து கூறுவீரா?” என்று கேட்டார்.அப்போது பிலிப்பு, இந்த மறைநூல் பகுதியிலிருந்து தொடங்கி, இயேசுவைப்பற்றிய நற்செய்தியை அவருக்கு அறிவித்தார்.அவர்கள் போய்க் கொண்டிருந்தபோது வழியில் தண்ணீர் இருந்த ஓர் இடத்துக்கு வந்தார்கள். அப்போது அவர், ”இதோ, தண்ணீர் உள்ளதே, நான் திருமுழுக்குப்பெற ஏதாவது தடை உண்டா?” என்று கேட்டார்.”அதற்குப் பிலிப்பு, ”நீர் முழு உள்ளத்தோடு நம்பினால் தடையில்லை” என்றார். உடனே அவர், ”இயேசு கிறிஸ்து இறைமகன் என்று நம்புகிறேன்” என்றார்.உடனே அமைச்சர் தேரை நிறுத்தக் கூறினார். பிலிப்பு, அமைச்சர் ஆகிய இருவரும் தண்ணீருக்குள் இறங்கினர். பிலிப்பு அவருக்குத் திருமுழுக்குக் கொடுத்தார்.அவர்கள் தண்ணீரிலிருந்து வெளியேறினவுடனையே ஆண்டவரின் ஆவியார் பிலிப்புவை எடுத்துச் சென்றுவிட்டார். அமைச்சர் அதன்பின் அவரைக் காணவில்லை அவர் மகிழ்ச்சியோடு தம் வழியே சென்றார்.பின்பு பிலிப்பு ஆசோத்து என்னும் இடத்தில் காணப்பட்டார். செசரியா போய்ச் சேரும்வரை அவர் சென்ற நகரங்களிலெல்லாம் நற்செய்தியை அறிவித்தார்.

**பதில்பாடல் :** அனைத்துலகோரே கடவுளைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்

### நற்செய்தி : யோவான் 6 : 44 – 51

அக்காலத்தில் இயேசு யூதர்களைப் பார்த்துக் கூறியது : என்னை அனுப்பிய தந்தை ஈர்த்தாலொழிய எவரும் என்னிடம் வர இயலாது. என்னிடம் வருபவரை நானும் இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன். ”கடவுள்தாமே அனைவருக்கும் கற்றுத்தருவார்“ என இறைவாக்கு நூல்களில் எழுதியுள்ளது. தந்தைக்குச் செவிசாய்ந்து அவரிடமிருந்து கற்றுக்கொண்ட அனைவரும் என்னிடம் வருவர். கடவுள்தாமே கற்றுத்தருவார் என்பதிலிருந்து தந்தையை எவராவது கண்டுள்ளார் என்று பொருள் கொள்ளக்கூடாது. கடவுளிடமிருந்து வந்துள்ளவர் மட்டுமே கடவுளைக் கண்டுள்ளார். உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் என்னை நம்புவோர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளனர். வாழ்வுதரும் உணவு நானே. உங்கள் முன்னோர் பாலைநிலத்தில் மன்னாவை உண்டபோதிலும் இறந்தனர். உண்பவரை இறவாமல் இருக்கச் செய்யும் உணவு விண்ணகத்தி லிருந்து இறங்கிவந்த இந்த உணவே. ”விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார். எனது சதையை உணவாகக் கொடுக்கிறேன். அதை உலகு வாழ்வதற்காகவே கொடுக்கிறேன்” என்றார்.

**தியானம்:** நாம் கடவுளைத்தேடும் போது அவர் நம் அருகில் வருவார். நாமோ தேவைகளில் மட்டும் அவரை தேடுகின்றோம். வேதனை துன்பம் நம்மை ஆட்கொள்ளும் போது, நோய்கள் நம்மை தாக்கும்போது அவரை தேடுகின்றோம், இடைவிடாமல் செபிக்கின்றோம். ஆனால் தேவைகள் சந்திக்கப்பட்டு விட்டால் அவரை மறந்து விடுகின்றோம், மீண்டும் அவரை தேட நமக்கு ஒரு காரணம் தேவைப் படுகின்றது. தேவைகளை சந்திக்க மட்டும்தான் கடவுளா? நம்மில் பலர் அவவாறுதான் செய்கின்றோம். ஆனால் நாம் எப்போதும் கடவுளை தேட வேண்டும் என்பதனை இன்றைய முதல் வாசகம் நமக்கு அறிவுறுத்துகின்றது. அதில் நாம் பார்க்கும் மனிதர் அரச சபையில் நிதி அமைச்சர் என்ற மிகப்பெரிய பொறுப்பில் இருக்கின்றார். ஆனால் தாம் செல்கின்ற போது இறைவார்த்தையை வாசித்துக் கொண்டு செல்கின்றார். இறைவன் மேல் அவருக்கு இருந்த ஆர்வம் அவரை அப்படி செய்ய வைத்தது. கடவுளை விரும்பி தேடும் அவரை கடவுள் ஆசீர் வத்தித்தார். அவரை தேடி தமது ஊழியனான பிலிப்பை அனுப்புகின்றார். இவ்வாறு தான் நாமும் கடவுளை விரும்பி தேடும்போது அவர் தமது ஊழியர்களை எமக்கு அனுப்புவார். பலருக்கு இந்த அனுபவம் இருக்கும். நினைக்க முடியாத ஒருவரிடம் இருந்து, தேவையில் இருக்கும் போது நமக்கு உதவி கிடைத்திருக்கும். எனவே நாமும் தேவைகளில் மட்டும் அல்ல எந்நேரமும் அவரை தேட வேண்டும். அப்போது கடவுள் அருளும் நிலை வாழ்வை எம்மால் கண்டுகொள்ள முடியும்.